www.tamilarangam.net

# தமிழ் மக்களுக்கும் மாணவர்களுக்கும்

**16–01–1984** திங்கள் இரவு எமது ஒன்றியத்தின் சார்பில் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த ஒன்பது போராளிகள் ஆயுதமுனையில் கடத்தப்பட்டார்கள். எம்மை மீறி இப் போராட்டத்தைக் குழப்பியமை தவறானதோர் நடவடிக்கையாகும். இச் செயலை எமது ஒன்றியம் வன்மையாகக் கண்டிப்பதுடன், குறித்த போராளிகளை மனிதாபிமானக் கண்ணோட்டத்துடன் எம்மிடம் திருப்பி ஒப்படைக்குமாறும் கேட்டுக் கொள்கிறது. மேலும் மேற்படி சம்பவத்திற்கு பொறுப்பானவர்கள் அதனால் ஏற்படுகின்ற பாதகங்களுக்கு காரணகர்த்தாக்களாவர் என்பதனையும் ஒன்றியம் தெரிவிக்கின்றது.

வெற்றியை நோக்கி நடாத்தப்பட்ட எமது போராட்டத்திற்கு ஆதரவும் ஒத்துழைப்பும் அளித்த பொதுமக்களுக்கு நன்றியைத் தெரிவிப்பதுடன் மேலும் எம்மால் தொடரப்படுகின்ற போராட்டத்தின் அடுத்த கட்டத்திற்கும் தங்கள் ஆதரவு கிடைக்குமெனவும் நம்புகின்றோம்.

**அனைத்துப் பல்கலைக்கழக தமிழ் மாணவர் ஒன்றியம்**

---

இப்பிரகாரம் யாழ். 68 அரசடி வீதி ஏ. சிவநாதன் அவர்களால் யாழ். புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் அச்சிட்டு 17–1–84-இல் வெளியிடப்பட்டது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்